www.Padasalai.Net www.Trb Tnpsc.com

மூன்றாம் பருவத் தொகுத்தறி மதிப்பீடு - 2024

# VII – தமிழ்

நேரம் : 2.00 மணி மதிப்பெண்கள் : 60

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10 x 1 = 10

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வயலில் விளைந்து முற்றிய நெற்பயிர்களை ________ செய்வர்.

அ) அறுவடை ஆ) உழவு இ) நடவு ஈ) விற்பனை

2. திருநெல்வேலி ________ ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.

அ) காவிரி ஆ) வைகை இ) தென்பெண்ணை ஈ) தாமிரபரணி

3. காந்தியடிகள் எப்போதும் ________ப்பேசினார்.

அ) வன்சொற்களை ஆ) அரசியலை இ) வாய்மையை ஈ) கதைகளை

4. மனித வாழ்க்கையில் தேவைப்படுவது ________.

அ) பணம் ஆ) பொறுமை இ) புகழ் ஈ) வீடு

5. 'தானொரு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

தா + ஒரு ஆ) தான் + னொரு இ) தான் + ஒரு ஈ) தானே + ஒரு

6. முதுமை + மொழி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) முதுமொழி ஆ) முதுமை மொழி இ) முதிய மொழி ஈ) முதல் மொழி

ஆ) பொருத்துக.

7. அக்கசாலை - கருணை
8. ஞானம் - பொன் நாணயங்கள் உருவாக்கும் இடம்
9. விளைநிலம் - விளக்கு
10. இரக்கம் - இன்சொல்

II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5 x 2 = 10

11. பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.
12. தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?
13. நீக்க வேண்டிய களை என்று அறநெறிச்சாரம் எதனைக் குறிப்பிடுகிறது?
14. பொருளீட்டுவதன் நோக்கமாகக் குன்றக்குடி அடிகளார் கூறுவது யாது?
15. ஒரு செயலைச் செய்ய எவற்றையெல்லாம் ஆராயவேண்டும்?
16. வாழ்க்கை மலர்ச்சோலையாக மாற என்ன செய்ய வேண்டும்?
17. விடுதலைப் போராட்டத்தில் காயிதேமில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.

III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 3 x 3 = 9

18. உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.
19. பூதத்தாழ்வார் ஞான விளக்கு ஏற்றும் முறையை விளக்குக.
20. திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.
21. ஆட்சிமொழி பற்றிய காயிதே மில்லத்தின் கருத்தை விளக்குக.
22. இளம் வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாது?



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
Scanned with AnyScanner

**IV. அடிபிறழாமல் எழுதுக.** **4 + 2 = 6**

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

23. 'மாரியொன்று' எனத் தொடங்கும் பழமொழி நானூறு பாடல் (அல்லது)

'வையம் தகளியா' எனத்தொடங்கும் புதுமை விளக்கு பாடல்

24. 'உறுபசியும்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்கவும்.** **2 x 2 = 4**

25. உவமை, உவமேயம், உவம உருபு - விளக்குக.

26. ஒரு பெயர்ச்சொல் எப்போது ஆகுபெயர் ஆகும்?

27. இரட்டைக்கிளவி என்பது யாது? சான்று தருக.

**VI. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **1 x 5 = 5**

28. டி.கே.சி குறிப்பிடும் திருநெல்வேலிக் கவிஞர்கள் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

29. 'உண்மை ஒளி' படக்கதையைக் கதையாகச் சுருக்கி எழுதுக.

30. 'பயணம்' கதையைச் சுருக்கி எழுதுக.

**VII. ஒரு பக்க அளவில் விரிவாக எழுதுக.** **1 x 5 = 5**

31. அ) என்னைக் கவர்ந்த நூல் *(அல்லது)*

ஆ) உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

**VIII. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **1 x 4 = 4**

32. உனக்குப் பிடித்த தலைப்பில் கவிதை ஒன்று எழுதுக.

33. உன்னிடம் உள்ள தனித்தன்மைகளாக நீ கருதுவன யாவை?

34. நீ ஒரு தலைவராக இருந்தால் எத்தகைய மக்கள் நலப்பணிகளைச் செய்வாய்?

**IX. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **7 x 1 = 7**

35. ***தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக.***

அ) அப்துல் கலாமின் புகழ் ________ உலகெங்கும் பரவியது.

(குன்றின் மேலிட்ட விளக்கு போல / குடத்துள் இட்ட விளக்கு போல)

36. ***கொடுக்கப்பட்டுள்ள ஊரின் பெயரில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக.***

அ) செங்கல்பட்டு

37. ***சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக.***

அ) நெல்லையப்பர் கோவில் ________ உள்ளது?

38. ***தலைப்புச் செய்தியை முழு சொற்றொடராக எழுதுக.***

அ) தலைப்புச்செய்தி : தேசிய அளவிலான கைப்பந்து போட்டி - தமிழக அணி வெற்றி

39. ***கீழ்க்காணும் சொல்லைப் பெயர்ச் சொல்லாகவும் வினைச் சொல்லாகவும் பயன்படுத்தி தொடர் உருவாக்குக.***

அ) விதை

40. ***கலைச்சொல் தருக:***

அ) Religion

41. ***சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக :***

அ) நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும். ________ துன்பப்பட நேரிடும்.

(அது போல, இல்லையென்றால்)



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
Scanned with AnyScanner